# CONSTRUCTION OF ADMINISTRATIVE SKILLS DEVELOPMENT ON MENTAL HEALTH AND INTELLIGENCE IN THIRUKKURAL

# திருக்குறள் கட்டமைக்கும் நிறுவாகத் திறன் மேம்பாட்டில் மனநலமும் மதி நுட்பமும்

Saravanajothi Seetharaman/சரவணஜோதி சீத்தாராமன்

Assistant Professor, Department Of Tamil,

Thiagarajar College, Madurai, India.

***Abstract…***The major objective of the research is reveal the Construction of Administrative Skills Development on Mental health and Intelligence in Thirukkural. The concept is to examine the role of management in the modern context. This design of the study is qualitative method and the methods of Descriptive and Comparative analysis has also been used. This research reveals the concepts such as, powers of purity in action, power in action, knowing the fitting time, Unforgetfulness and Greatness in Thirukkural. The concept of mental health and intelligence is fundamental to the development of managerial skills. Ethical thoughts consumed in Second Century, helps to explain the modern era Administrative thoughts.

***Keywords…*** Thirukkural**,** Thiruvalluvar**,** Administrative, Mental health, Morality, Intelligence, Literature,

***ஆய்வுச்சாரம்-*** இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் அமைந்துள்ள பொருட்பால் கருத்துக்கள் போர்கால சூழலின் அரசியல் கட்டமைப்பினை எடுத்துரைக்கின்றன. இக்கருத்தியல் தற்கால சூழலில் நிர்வாகத் திறன் மேம்பாட்டியல் நோக்கில் அமைந்துள்ளதை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் விளக்கமுறை மற்றும் ஒப்பீட்டு அணுகுமுறை கையளாப்படுகிறது. திருக்குறளில் கூறப்பட்டுள்ள வினைத்துய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை, காலம் அறிதல், பொச்சாவமை, பெருமை என்ற அதிகாரங்கள் வழி நிருவாகவியல் மேம்பாட்டு சிந்தனையை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது. ஒழுக்க நெறிகள் வழி மனித வாழ்வியல் கூறுகள் திருவள்ளுவரால் திருக்குறளில் எடுத்துரைக்கப்படுகின்றன. நிர்வாகத் திறன் மேம்பாட்டிற்கு அடிப்படையான மனநலம், மதி நுட்பம் என்ற கருத்தியல் திருக்குறளில் அமைந்துள்ளமைக் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் மனித வாழ்கைக்கு எடுத்துரைக்கப்பட்ட அறவியல் சிந்தனைகள், தற்கால நிர்வாகவியல் சிந்தனைப் போக்கை விளக்குவதற்கு பொருந்திப் போகுமுகமாக உள்ளன என்பதை ஆய்வாளர் உறுதிசெய்கின்றார்.

***கருச்சொற்கள்…*** திருக்குறள், திருவள்ளுவர், நிர்வாகம், மனநலம், ஒழுக்கம், மதி நுட்பம், இலக்கியம்.

## *அறிமுகம்*

திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று அதிகாரங்களைக் கொண்டன. மனிதர்களின் வாழ்வியல் கூறுகளைக் கட்டமைக்கும் கருத்தியல்களைக் கொண்டது அறத்துப்பால். நாடு, அரசு, அரசாங்கம், ஆட்சிமுறை, இவற்றிற்குத் தேவையான கருத்தியல் கட்டமைப்பினைக் கொண்டது பொருட்பால். மக்களின் அறம் சார்ந்த காதல் உணர்வு கருத்தியல் கட்டமைப்பினைக் கொண்டது

காமத்துப்பால். நூலின் தன்மை அறம் சார்ந்த கருத்தியல் கட்டமைனை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. சங்க காலம் வாழ்வியல் என்பது போர்க்கால சூழலியல் சார்ந்தது. சங்க காலச் சூழலை ஆ.வேலுபிள்ளை (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், 1985) இயற்கை நெறிக்காலம் என்று வகைப்படுத்துகிறார். இந்த வகைப்பாடு தமிழ் ஆய்வில் முக்கியமானதாகும். இயற்கை சார்ந்த வாழ்வியலை மேற்கொண்ட மக்கள் விலங்குகளோடு போராடி தங்கள் வாழ்வியலைக் கட்டமைத்தனர். மன்னர்கள் தங்கள் நிலப்பரப்பை விரிவுபடுத்த போர் முறையைக் கையாண்டனர். போர் என்பது வீரம் சார்ந்தும் விவேகம் சார்ந்தாகவும் இருக்க வேண்டியிருந்தது. வீரம் உடல் சார்ந்த கருத்தியல் என்றாலும் விவேகத்தோடு செயல்பட வேண்டிய கருத்தியலாகும். விவேகம் மனநலம் சார்ந்தது. மனநல நிர்வாகத்திறனுக்கு முக்கிய ஊன்றுகோலாகும். நிர்வாக கட்டமைப்பினை வள்ளுவர், வலுவான மனவலிமை மேம்பாடு, பணியாற்றும் பணியாளர் மேம்பாட்டுத் திறன், பணியாற்றளின் மூன்று பண்புகள், காலம் அறிந்து செயல்படுத்தும் திறன். மதிநுட்பமிக்க உணர்வு மேலாண்மை, நிர்வாகி குறிக்கோளை அடையும் வழிமுறைகள், மக்களின் ஊக்கத்திற்கு ஏற்ப வாழ்க்கையில் உயர்வு பெறுவர். குறிப்பாக நிர்வாகி நிலையான கருத்தியலைக் கொண்டு இயங்குதல் கூடாது. காலத்திற்கு ஏற்ப நெகிழ்வுத்தன்மை கொண்ட நிர்வாக சிந்தனையைப் பெற்றிருத்தல் வேண்டும். நிர்வாகி தன்னுடைய மதி நுட்பத்தால் மட்டுமே சிறந்த நிர்வாகியாக முடியும். திருக்குறளில் அமைந்துள்ள பொருட்பல் அதிகாரம் போர்கால வாழ்வியலின் அடுத்தகட்ட நகர்வாக அமைந்தவை. மனத்திற்கண் மாசிலனாதால் என்ற அறம் கட்டமைக்கப் படுகிறது. அறத்தின் வழி வாழ்வு என்பது மக்கள் மத்தியில் கற்பிக்கப்படுகிறது. இந்த காலச்சூழலில்தான் சமயங்கள் வளர்ச்சி பெறுகின்றன. சமயமும் அறமும் இணைகின்ற போது சமுதாயத்தில் புதுமையான வாழ்வியல் முறைகள் உற்பத்தியாகின்றன. உடல் வலிமையை முன்னிருத்திய சங்ககால சமூதாயாம், வள்ளுவர் காலத்தில் அறம் சார்ந்த அறிவை முன்னிருத்தின. இக்காலத்தில் போர் அல்லாத அரச அரசமைப்பை கட்டமைப்பதற்கு வள்ளுவர் முன்னிருத்திய கருத்தியல் நிர்வாகவியல் சிந்தனையாக முகிழ்க்கிறது என்பதை ஆய்வாளர் உறுதிசெய்கிறார்.

## *ஆய்வு முன்னோடிகள்*

தமிழில் திருக்குறளை மையாப்பொருளாக் கொண்டு பல்வேறு அறிஞர்களால் ஆராய்ந்து கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலும் திருக்குறளில் வாழ்வியல், அறம், சமய ஒருமைப்பாடு, மொழிநடை, உவமை, மேலாண்மை என்ற பொருண்மையில் ஆய்வுகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. திருக்குறள் மேலாண்மையில் நோக்கில் இளநிலை ஆய்வுகளும் வெகுசன மக்களின் கருத்தியல் நோக்கிலும் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. திருக்குறளில் நிர்வாக மேம்பாடு என்ற பொருண்மையில் மனநலம் குறித்தும் மதிநுட்பம் குறித்தும் ஆராய்ந்து விளக்குவது இவாய்வின் போக்காக அமையப்பெறுகின்றது.

AG Aganudai Nambi, (1987), *Management Philosophy Of Thiru – Valluvar in Public Administration* என்றா நூல் அன்னம் வெளியீட்டின் மூலம், Moving with superior officers, The good administrator, The effective exective, Delegation, choosing the executives, Leadership and personnel management, Philosophy of public administration for a welfare state, One world one rule and world peace என்ற பொருண்மையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சீ.சரவணஜோதி, (2016), *இலக்கியமும் மனிதவள மேம்பாடும்* பாவை பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்பட்டது. மனிதள மேம்பாட்டை புரிந்து கொள்வதில் சில அடிப்படைகள், இலக்கியமும் மனிதவள மேம்பாடும், பதினெண்கீழ்க்கணக்கு வாசிப்பில் செயலூக்கமும் ஒழுங்குணர்வும், இலக்கியம் கட்டமைக்கும் தலைமைப்பண்பும் ஒருங்கிணைத்தலும், பண்டைத்தமிழர் காட்டிய திட்டமிடுதலும் முடிவெடுத்தலும், பண்டைத்தமிழரின் பணிநியமனமும் பணிபகுப்பும், தகவல் தொடர்பு உறுதிப்படுத்தும் மனிதவள மேம்பாடு என்ற பொருண்மையில் எடுத்துரைக்கப்பட்டன.

வெ. இறையன்பு, (2018), *இலக்கியத்தில் மேலாண்மை* நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. திருக்குறளில் காணலாகும் மேலாண்மை சிந்தனைகளை எடுத்துரைக்கின்றன. புகைப்படங்களும் எளிய உதாரணங்களும் கொண்டு இரண்டு பக்க அளவில் மேலாண்மை குறித்த கருத்தியல் எடுத்துரைக்கப்படுகின்றன. திடக்கழிவு மேலாண்மை, மனிதவள மேம்பாடு, தலைமைப் பண்பு போன்ற கருத்தியியல்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

திருக்குறளில் மேலாண்மை குறித்த சிந்தனைகளை மேற்கூறப்பட்ட ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளன. நிர்வாக மேம்பாடு குறித்தும் ஆய்வுக்கட்டுரைகள் வந்துள்ளன. ஆனால் நிர்வாகத்திறன் மேம்பாட்டில், மன நலமும், மதி நுட்பமும் அமைய வேண்டிய முறையினை வள்ளுவரின் கருத்தியல்கள் குறித்த ஆய்வுகள் வரவில்லை.

திருக்குறளின் பொருண்மைகளில் மதி நுடபமும் மன நலமும் அமைந்துள்ள விதம் எடுத்துரைக்கப் படுகிறது. நிர்வாக மேம்பாட்டு நோக்கில், மன நலம், மதி நுடபம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதினை மேலாண்மை சிந்தனைகளைப் பொருத்தி திருக்குறளுக்கு விளக்கம் அளிப்பதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்கு தேவையான நூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஆய்வாளர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மனிதவள மேம்பாடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளமையால் தரவுகள் சேகரிப்பதில் தெளிவு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே தரவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டு நிரல் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

## மனவலிமை மேம்பாடு

மனிதனின் செயல்பாட்டில் உடன்பாடு எதிர்மறை என்ற இரு வினைக் கூறுகளின் தாக்கம் மனநலத்தைக் கட்டமைக்கும். ஆனால், நிர்வாகச் செயல்பாட்டில் பணியாளர் முதல் தலைமை நிர்வாகி வரை மனவலிமை மேம்பாடு உடையவர்களாக இருப்பது அவசியமாகும். நிறுவன அமைப்பின் செயல்பாடுகள் பணியாளரின் ஆளுமைத் திறன் சார்ந்து உருவாக்கப்படுவதாகும். தேசிய சுகாதர அமைப்பு உடல் நலத்தை விட மன நலமே முதன்மையானது என்ற கருத்தினை முன்வைக்கின்றனர். எனவே, நிறுவன அமைப்பில் பணியாளரின் மனவலிமை மேம்பாடு அடைவதற்கு பல்வேறு விதமான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. தலைமை நிர்வாகி ஒரு பணியைச் செய்வதற்கு முன் நிறுவனச்சூழல் குறித்த அறிவினைப் பெற்றால் மட்டுமே மன வலிமை பெறமுடியும். இதனை வள்ளுவர், மன வலிமை என்பது தனித்த ஆற்றல் உடையது அல்ல. வினையின்மீது நாம் வைக்கின்ற நம்பிக்கையே மன வலிமை ஆகும்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனதிடபம்
மற்றைய எல்லாம் பிற (திருக்குறள், 661)

என்ற குறளின் வழி மனவலிமை என்பது வினியின்மீது நாம் வைக்கின்ற நம்பிக்கை என்ற கருத்தியல் முன்வைக்கப்படுகிறது. வினை குறித்த முழுமையான அறிவு இல்லையெனில் நிர்வாக செயல்பாட்டில் ஒழுங்குணர்வு அற்ற தன்மை காணப்படும். எனவே, ஒரு பணியை மேற்கொள்கிறபோது வலுவான நம்பிக்கையுடன் செயல்படவேண்டும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின் (திருக்குறள், 666)

என்ற குறளின் வழி, நிர்வாகியின் வலுவான வலிமை என்பது பணியைச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் அவற்றைச் செயலாற்றுவதில் உறுதி உள்ளவராக இருந்தால் மட்டும் அப்பணியைச் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். நிர்வாகி முதல் பணியாளர் வரை பணியைத் தொடங்கிறபோது மன அழுத்தம் சில நேரங்களில் ஏற்படும். இத்தகையச் சூழலில் மனவலிமை மிக்கவர்களாக இருக்க வேண்டும். நிர்வாக மேம்பாட்டில் பணியைத் தொடங்குகிறபோது விழிப்புணர்வுப் பயிற்சி நடத்தப்படும். இப்பயிற்சியில் பணியின் தன்மை குறித்தும் செயல்படுத்தும் முறை குறித்தும் விவரிக்கப் படும். இருப்பினும் தலைமை நிர்வாகிக்குப் பணியைச் செயல்படுத்தி முடிக்கும் வரை மன அழுத்தம் இருக்கும். இத்தகையச் சூழலில் இரண்டு வகையான கருத்துயல்களைத் தலைமை நிர்வாகி தம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இதனை வள்ளுவர்,

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள் (திருக்குறள், 662)

என்ற குறளின் வழி நிர்வாக மேம்பாட்டில் இரண்டுவிதமான கருத்தியலை முன்னெடுக்க வேண்டும் என்கிறார். இவற்றை,

1. இடையூறு வருவதற்கு முன்பே தடுத்தல் வேண்டும்.
2. இடையூறு வந்தபின் அதற்கு தளராமால் செயல்படும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இவையிரண்டும் வினை தொடக்கத்தின் முன் கட்டமைக்க வேண்டிய வழிமுறைகளாகும். இத்தகையப் பயிற்சி கொடுக்கப்பட்டால் தலைமை முதல் கடைசிப் பயணியாளவரை மனவலிமை பெற்றவர்களாக அமையப் பெறுவார்கள்.

### நிர்வகத் திறன் மேம்பாட்டின் அடிப்படைகள்

நிர்வாகத் திறன் மேம்பாட்டில் சில அடிப்படைகள் உள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் பணி என்பது அடிப்படையானது. பணியின் இயங்கு தன்மை பொறுத்து நிறுவன மேம்பாட்டியலைக் கட்டமைக்க முடியும். பணியின் இயங்கு தன்மை என்பது நிர்வாகிகளின் பொறுப்புணர்வில் கட்டமைக்கப்படுகிறது. நிர்வாகிகள் வினை செயல்பாட்டுத் திறன் குறித்த சிந்தனையை முன்னெடுக்கும் நோக்கில் நிர்வாக மேம்பாட்டியல் கட்டமைக்கப்படுகிறது. மேலாண்மை சிந்தனையாளரின் கருத்துப்படி, வினை செயல் வடிவத்தினை இரண்டு வகையாக நெறிப்படுத்தலாம்.

1. நீண்ட காலப்பணி
2. குறுகிய காலப்பணி

இவ்விரு பணிகளின் இயங்கு தன்மை, பணியாளர்கள் வகைப்பாடு, பணியின் கால அளவு இவற்றை மதிப்பிட்டு நிர்வாகத்திறன் செயல் படுத்தப்படும் M.Laxmikanth, (2001) Public Administration நூலில் வகைப்படுத்துகிறார். வள்ளுவர் இக்கருத்தினை, விரைவாக செய்ய வேண்டிய பணி, மெதுவாக செய்யவேண்டிய பணி என்று இரண்டாக பிரிக்கின்றார். சான்றாக,

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை (திருக்குறள், 672)

இக்குறளின் வழி வினை செயல்பாட்டினைக், காலம் கடத்துவது, காலம் கடத்தாமல் செய்வது என்று வகைப்படுத்துகிறார். மேலாண்மை சிந்தனையாளர்கள் பணியின் தன்மையை அளவிட்டு காலம் மதிப்பீடு செய்யதார்கள். காலத்தின் தன்மைக்கு ஏற்ப பணி மதிப்பீடு செய்யப்பட்டது வள்ளுவரால். காலத்தை வைத்து பணியை மதிப்பிடுவதும் பணியை வைத்து காலத்தை மதிப்பிடுவதும் இரண்டும் ஒரே செயல்பாட்டு வடிவம்தான். நவீன மேலாண்மைச் சிந்தனையில் பணியின் தன்மை மதிப்பிடப்படுகிறது இவற்றிகுரிய காலம் திட்டமிடப்படுகிறது. வள்ளுவர் கால மேலாண்மையில் தூங்கிக் தூங்கிச் செய்யும் வினை, தூங்காது செய்யும் வினை என்று பணி மதிப்பிடப்படுகிறது. பணிகுறித்த இலக்கு மட்டும் வள்ளுவர் கருத்தில் ஆழமாக கட்டமைக்கப்படுகிறது. இக்கருத்தியலை இன்னும் விரிவாக விளக்க முயற்சிக்கிறார்,

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது (திருக்குறள், 671)

என்ற குறளின் மூலம் ஒரு வினையின், நன்மை, தீமை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். துணிந்தபின் வினையைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டால் தாங்க முடியாத தீமை வரும். வினையின் தன்மையை நீண்ட காலமா, குறுகிய காலமா என்று மதிப்பீடு செய்தபின் வினை தாமதப்படுமானால் நிர்வாகச்சூழல் சிக்கலுடையதாக மாற்றம் பெறும். எனவே பணியின் தன்மைக்கு ஏற்ப கால மதிப்பீடு நிறுவாகத் திறன் மேம்பாட்டில் அடிப்படைக் கூறாகும்.

### பணி ஆய்வு செய்யும் திறன்

நிர்வாகச் செயல்பாட்டில் பணியின் தன்மை அளவிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. பணியை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது நிர்வாகிக்களுக்கு மன அழுத்தம் தருவதாகும். எனவே, தலைமை நிர்வாகிகள் தங்கள் செயல்பாட்டைப் பல்வேறு ஆலோசனை குழுக்களின் மூலம் உதவியைப் பெறுகின்றனர். இவர்களுடைய ஆய்வுத் திறனில்,

1. பணியினை முன்னமே செய்த குழுக்களின் ஆலோசனைகளைக் கேட்டல்
2. வெவ்வேறு வகையான பணிகளில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களின் கருத்துக்களைப் பெறுதல்
3. நம் நிறுவனத்தின் மூலம் இப்பணியைச் செய்ய முடியுமா என்று ஆலோசித்தல்.

இவை நவீன மேலாண்மையில் பணி ஆய்வு செய்யும் திறனாக அமைகிறது. வள்ளுவர் பணி ஆய்வு செய்யும் முறை குறித்து கூறுகையில்,

பொருள்கருவி காலம் வினையிடனோடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் (திருக்குறள், 675)

என்ற குறளின் மூலம், பணித்தேர்வு செய்யும் முறையைக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

வினை செய்வதற்கு வேண்டிய பொருள், கருவி, காலம், வினை, இடம் ஐந்தும் குற்றம் இல்லாமல் ஆராயப்பட வேண்டியதாகும். Material, Instrument, Time, Place, Action, (M.Laxmikanth, (2001) Public Administration) ஆகிய ஐந்தும் பணி தேர்வு செய்யும் முறையாகும். ஒரு பணித்திட்டம் தொடங்கும் போது, முதன்மை மூலப்பொருள், பணியைச் செய்வதற்கான இயந்திரம் மற்றும் பணியாளர்கள், பணிசெய்வதற்கான காலம், இடம், பணியினைச்

செயல்படுத்தும் தன்மை இவை ஐந்தும் ஆரயப்பட வேண்டியது. இவ்வாறு ஆராயப்படும் போது பணியோடு தொடர்புடைய பிற பணிகளையும் சேர்த்து செய்யும் மதி நுட்பம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று (திருக்குறள், 678)

என்ற குறளின் வழி ஒரு வினையோடு மற்றொரு வினையைச் சேர்த்து செய்யவேண்டும் என்பதை எடுத்துரைக்கிறார். வள்ளுவர் கால வாழ்வியல் சூழலோடு உதாரணம் காட்டி விளக்குகிறார். ஒரு யானையை மற்றொரு யானை கொண்டு அடக்குவது போல் ஒருவினைய மற்றொரு வினையோடு சேர்த்து முடிக்கும் மதிநுட்பம் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்கிறார் வள்ளுவர். இத்தகைய மதிநுட்பம் வளர வேண்டுமானால் இரண்டு வகையான செயல்பாடுகளைக் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

1. நினைவு இருக்கும் நேரங்களில் எல்லாம் பணி குறித்த கருத்தினை நினைவில் கொள்ளவேண்டும்.
2. பணியினால் வரும் பயன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். நவீன மேலாண்மை சிந்தனையாளர்கள் இத்தகைய கருத்தினை முன்வைக்கின்றனர். (P.C. Tripathi, (1997) Human resources development, New Delhi: Sultan chaud & sons.)

வள்ளுவர் இக்கருத்தியலை எடுத்துரைக்கும் போது, வினை செய்யும் காலம் முக்கியமானது என்பதை,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கி செயல் (திருக்குறல், 673)

என்ற குறளின் வழி வினையினைச் செய்ய முடியும் காலங்களில் செய்து முடிக்க வேண்டும் அப்படி செய்தால் நன்மையப் பெறலாம். செய்ய முடியாத சூழல் ஏற்பட்டால் வினை நடைபெறும் இடங்களிலாவது செயல்பட முன்வர வேண்டும். நினைத்த நேரங்களில் எல்லாம் பணிசெய்க அப்படி இல்லையென்றால் பணி செய்ய வேண்டிய இடங்களிலாவது பணி செய்க என்கிறார் வள்ளுவர். தற்கால மேலாண்மையில் குடும்ப அமைப்பு கருதி மனநல ஆலோசகர்கள் அலுவலகப் பணியை விட்டிற்கோ விட்டின் சூழலை அலுவலகத்திற்கோ கொண்டு செல்லுதல் கூடாது என்கின்றனர். இதே கருத்தினை மனிதவள மேம்பாட்டு சிந்தனையாளர்களும் முன் வைக்கின்றனர். (இராதா, (2003) மேலாண்மைத் தத்துவங்கள், சென்னை: பிரசன்னா பப்ளிசர்ஸ்.) இக்கருத்தினை மனதில் கொண்ட வள்ளுவர் எல்லா நேரங்களிலும் என்று கூறாமல் கிடைக்கும் நேரங்களில் என்று கூறுவதும் பணி செய்ய வேண்டிய இடங்களிலாவது செயல்படுவது எனக் கூறுவதும் தனிசிறப்பு ஆகும். இதனால் வரும் பயன் பற்றி வள்ளுவர் காலம் அறிதல் என்ற அதிகாரத்தில்,

ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதிய இடத்தாற் செய்யின் (திருக்குறள், 484)

என்ற குறளின் வழி, தகுதியான காலம் அறிந்து அதற்குரிய இடங்களில் செய்தால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அடைந்து விடலாம். எனவே, பணி ஆய்வு செய்யும் திறனில், இடம், காலம் குறித்த மதிநுட்பம் நிர்வாக மேம்பாட்டில் அவசியமாகும்.

## *மதி நுட்பமும் மகத்துவமான உணர்வும்*

மனிதர்களிடம் அமைந்திருக்கும் அற்புதமான திறன் மதி நுட்பமாகும். தத்துவவாதிகளின் கருத்தியல்படி மதி நுட்பம் பிறப்பால் உருவாவதாகும். ஆய்வாளர் கருத்துப்படி பிறப்பால் தனிப்பட்ட குணம் வருவதில்லை பயிற்சியால்தான் வருகிறது என்கின்றார். மனிதர்கள் தனித்த பயிற்சியை எத்துறையில் மேற்கொள்கிறார்களோ அத்துறையில் மதிநுட்பம் உடையவராக திகழ்வார். பொருளாதாரத்தில் தேர்ச்சியுடையவர் பொருளாதாரம் கருத்தியலை எடுத்துரைப்பதில் மதிநுட்பம் உடையவராக இருப்பார். நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு மதிநுட்பம் சற்று கூடுதலாக இருக்கவேண்டும். எல்லாத்துறைகள் குறித்தப் பரிச்சியமும் அறிவும் இருக்க வேண்டும். எனவேதான் நிர்வாகத்துறையில் உள்ளவர்களின் மதிநுட்பம் மகத்துவமானது என்று கூறப்படுகிறது. பல மனிதர்களின் வாழ்க்கை, பொருளாதாரம் நிர்வாகிகளின் செயல் திறனில் உள்ளது. எனவேதான் வள்ளுவர்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (திருக்குறள், 388)

என்ற குறளின் வழி, மக்களால் இறைவனுக்கு அடுத்த இடத்தில் வைத்துப் போற்றபடுபவர்கள் நிர்வாகிகள். கடவுளுக்கு அடுத்து உலகியல் சார்ந்த அனைத்து அறிவும் பெற்றவன் நிர்வாகி திகழவேண்டும். இவர்களிடம் அமைந்துள்ள சிறப்பு குணம் எதுவென்றால்,

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல் (திருக்குறள், 975)

என்ற குறளின் வழி சிறப்புக்குரியவர்கள் செய்ய வேண்டிய செயலை திறமையாக செய்து முடிப்பார்கள். இத்தகைய செயல் திறன் உள்ளவர்கள் மகத்துவமான மதி நுட்பம் உடையவர்கள் என்று அழைக்கப்படுவார்கள்.

## *முடிவுரை*

திருக்குறளில் பொருட்பால் முழுவதும், அரசியல், அரசு, நாட்டின் செயல்பாடுகள் குறித்த கருத்தினை எடுத்துரைகின்ற நிர்வாக சிந்தனை நூல். நிர்வாக மேம்பாட்டில் பல்வேறு கூறுகள் உள்ளன. இவற்றில் மதிநுட்பமும் மனநலமும் மிக அவசியமான ஒன்று. எனவே, இந்நூலில் அமைந்த அறம் சார்ந்த நிர்வாக கருத்தியியல் நவீன மேலாண்மை சிந்தனையாளர் கருத்தியலுடன் ஒப்பிட்டு விளக்கப்படுகிறது. நிர்வாகி இடையூறு, இடையூறு வந்தபின் சமாளிக்கும் திறன் கொண்டால் மனவலிமை பெறுமுடியும். பணிசெய்யும் திறனில் தகுதியான காலம் அறிந்து அதற்குரிய இடங்களில் செய்தால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அடைந்து விடலாம். எனவே பணி ஆய்வு செய்யும் திறனில், இடம், காலம் குறித்த மதிநுட்பம் நிர்வாக மேம்பாட்டில் அவசியமாக எடுத்துரைக்கப்படுகிறது. நிர்வாகத்துறையில் உள்ளவர்களின் மதிநுட்பம் மகத்துவமானது ஏனெனில் மக்களால் இறைவனுக்கு அடுத்த இடத்தில் வைத்துப் போற்றபடுபவர்கள் நிர்வாகிகள். கடவுளுக்கு அடுத்து உலகியல் சார்ந்த அனைத்து அறிவும் பெற்றவனாக நிர்வாகி திகழவேண்டும் என்பதை வள்ளுவர் எடுத்துரைக்கிறார். உடல் வலிமையை முன்னிருத்திய சங்ககால சமூதாயாம், வள்ளுவர் காலத்தில் அறம் சார்ந்த அறிவை முன்னிருத்தின. இக்காலத்தில் போர் அல்லாத அரச அரசமைப்பை கட்டமைப்பதற்கு வள்ளுவர் முன்னிருத்திய கருத்தியல், நிர்வாகவியல் சிந்தனையாக வளர்ந்தது. நிர்வாகவியல் சிந்தனையில், மதிநுட்பம், மனநலம் என்ற கருத்து நவீன மேலான்மைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதை ஆய்வாளர் உறுதிசெய்கிறார்.

## *REFERENCE*


[1] Agamudai Nambi, (1987), ***Management philosophy of Thiru – valluvar in public administration,*** Sivagangai: Annam (P) LTD.
[2] Baskara Sethupathi., R., (2004), ***Manithavala melanmai marrum manithavala membadu*** (in tamil), Chennai: Pavai publication.
[3] Baskara Sethupathi., R., (2007), ***Nirvagavil sinthanaiyalargal*** (in tamil), Chennai: New chantry book house.
[4] Dhandapanithesigar., S. (1950), ***Thirukkural,*** Tharumapura athinam,www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0012344_திருக்குறள்_உரைவளம்.pdf
[5] Iraiyanbu., V., (2018), ***Ilakkiyathil Melanmai***, Chennai: New Chentry Book house.
[6] Laxmikanth., M., (2001) ***Public Administration***, New Delhi: Tata Mcgraw – Hill Publishing Company.
[7] Meenakshisundaram, T.P., (1979), ***Philosophy of thiruvalluvar***, Madurai: Madurai Kamarajar University.
[8] Nair., M.R.R., and Rao., T.V., (1986), ***Excellence through, Human resource development,*** New Delhi: Oxford and IBH Publishing company.
[9] Palanivelu., S., (1994), ***Manithavala membadu*** (in tamil), Chennai: Ilango pathipagam.
[10] Pope., G., U., ***Thirukkural,*** *http://www.tamilvu.org/library/l2100/html/l2104vur.htm*
[11] Rajaram., M., (2005), **Kalavi melaanmaiyil manithavala membadu**, (in tamil) Chennai: Palaniyappa brothers.
[12] Ratha., (2003), ***Melaanmai thaththuvangal*** (in tamil), Chennai: Prasana publication.
[13] Rajasekar., N., Sinnakaruppan., V., (1998), ***Paniyalar mellanmaiyum tholil uravugalum*** (in tamil), Madurai: Madurai kamaraj university.
[14] Rajagopalan., M. S., (1996), ***Melammaiyil puthiya sinthanaigal*** (in tamil), Chennai: Manivasagar pathippagam.
[15] Rao., V.S.P., and Hari Krishna., V., (2002), ***Management text and cases,*** New Delhi: Excel books.
[16] Ravichendran., J., (2001), ***Melanmaiyil muranpadu*** (in tamil), Chennai: Manivasagar pathippagam.
[17] Ravichendran., J., (2003***), Melanmaiyil*** (in tamil), Chennai: Manivasagar pathippagam.
[18] Ravichendran., J., (2003), ***Nirvagavil kotbadu*** (in tamil), Chennai: Manivasagar pathippagam.
[19] Supurayalu., R., (1999), ***Inraiya melanmai*** (in tamil), Chennai: Manivasagar pathippagam.
[20] Saravanajothi., S., (2016), ***Ilakkiyamum manithavala membadum***, (in tamil) Chennai: Pavai Publication.
[21] Saravanajothi seetharaman (2020), ***Morality Thoughts and Social Awareness in Vivekasinthamani,*** *Journal of Emerging Technologies and Innovative Research (JETIR) www.jetir.org.*

[22] Saravanajothi seetharaman (2020), ***Avoiding mean associations in the socio political background of Thirukkural.*** International Journal of Creative Research Thoughts (IJCRT) www.ijcrt.org.
[23] Saravanajothi seetharaman (2020), ***Creations of social relations in friendship through thirukkural,*** *Journal of Emerging Technologies and Innovative Research (JETIR) www.jetir.org*.
[24] Tripathi, P.C., (1997) ***Human resources development***, New Delhi: Sultan chaud & sons.)
[25] Veluppillai, A. (1985). ***Tamil ilakkiyattil kalamum karuttum,*** munram patippu. Chennai: Pari Puttaka Pannai.